RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# உ.வே.சா. உரைநடைப் படைப்புகளில் தமிழர் உணவுப் பண்பாடு

இரா. ஆனந்த் [அ], லோ. அமுதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோவை-641020, தமிழ்நாடு, இந்தியா.

# Tamil food culture in prose works of U.Ve.Sa.

R. Anand [a], L. Amutha [a, *]

[a] Department of Tamil, Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore-641020, Tamil Nadu, India

* Corresponding Author:
amurhalonganathans@gmail.com

Received: 09-04-2024
Revised: 18-06-2024
Accepted: 30-06-2024
Published: 01-08-2024

Check for updates

**ABSTRACT**

Food is not only a basic need for survival in Tamil tradition, but also a person's five senses can be controlled by his diet. As such food is offered to the Lord, it gives strength to the body and mind, Palandamizhars believe. Not only that, but food was also valued as an attribute of hospitality. This article highlights the food traditions of Palanthamijar found in the works of U.ve.Sa.

**Keywords:** Food Culture, Numbers, Tamil Tradition, Diet, Strength

## முன்னுரை

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உடலுக்குத் தேவையான மருந்துகள் பற்றி திருவள்ளுவர் ஆறு குறள்களில் உணவை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். ஆகவே 'உணவே மருந்து; மருந்தே உணவு, என்னும் கருத்தாக்கம் தமிழ் இலக்கியங்களில் சங்ககாலம் தொட்டு இருந்து வருவதைக் கண்ணுறலாம். மேலும் தமிழர்கள் ஒரு மனிதனின் அடிப்படைப் பண்புகளை கட்டமைப்பதில் உணவிற்கும் முக்கியத்துவம் உண்டு என்பதையும் அறிந்திருந்தனர். அவ்வகையில் 18-ஆம் நூற்றாண்டில் பிறந்து 87 அகவை வரை வாழ்ந்து மறைந்த உ.வே.சா. அவர்களின் உரைநடை படைப்புகளில் பழந்தமிழரின் உணவுப் பண்பாடு பற்றி அமைந்துள்ள கருத்துக்களை இனங்காண்பதே கட்டுரையின் நோக்கமாகும் .

## உ.வே.சா.வின் படைப்புகள்

தமிழ்ப் பதிப்புப் பணியின் தலைமகனாகப் போற்றப்படும் உ.வே.சா. (உத்தமதானபுரம் வேங்கடசுப்பன் மகன் சாமிநாதன்) அவர்கள் தன் வாழ்க்கை வரலாற்றையும் தன் ஆசிரியர் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் உரைநடையில் விரிவாக எழுதியுள்ளார். மேலும் இளம் வயது முதல் இறுதி காலம் வரை தான் மேற்கொண்ட பயணங்களில் கண்டு கேட்டு அறிந்த செய்திகளையும் குறிப்பிடத்தக்க மனிதர்களைப் பற்றியும்

தம்முடைய குறிப்புகளில் பதிவுசெய்துள்ளார். நான் கண்டதும் கேட்டதும், பழையதும் புதியதும், நினைவுமஞ்சரி, நல்லுரைக் கோவை ஆகிய தலைப்புகளில் அவை நூல்களாக வெளிவந்துள்ளன. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமாக வாழ்ந்த உ.வே.சா. உரைநடைப் படைப்புகளில் அக்காலச் சமுதாயச் சூழலை வெளிப்படுத்தும் பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் தமிழ்ச் சமூகத்தின் உணவுப் பண்பாடு ஈங்கு கருதற்பாலது.

## உணவின் முக்கியத்துவம்

மனிதன் உயிர் வாழ்வதற்கான மிக அடிப்படையான தேவையாக உணவும் நீரும் அமைந்துள்ளன. "உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"[1] (ப.இராமநாதப் பிள்ளை (உரையாசிரியர்), திருமந்திரம் மூவாயிரம், பக்க எண்.154) என்னும் திருமூலர் கருத்துப்படி உடலின் ஆரோக்கியத்தை பேணிக்காப்பதன் அவசியத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தனர். அதோடு மட்டுமின்றி ஒருவர் உண்ணும் உணவானது உடலையும் மனதையும் பக்குவப்படுத்தும் வகையில் அமைந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதினர். பலர் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும்போது அனைவரும் உணவு உண்டு முடித்த பின்னரே எழுந்து செல்ல வேண்டும். இடையில் ஒருவர் மட்டும் எழுந்து செல்வது முறை அன்று என்னும் வழக்கம் இன்றுவரை நம்மிடையில் இருந்து வருகிறது. இத்தகைய உணவு சார்ந்த பழக்க வழக்கங்கள் பல உள்ளன. அதனால்தான் உணவு என்பது ஓர் உயிரியல் நிகழ்ச்சியாக மட்டும் இல்லாமல் சமூக நிகழ்ச்சியாகவும் இருப்பதாக மொழியியலார் கருதுவர்.[2] (முத்து சண்முகன், இக்கால மொழியியல், பக்க எண்.16)

## உணவும் மனவலிமையும்

உ.வே.சா. அவர்கள் எழுதிய நினைவு மஞ்சரி முதல் பாகத்தில் 'எங்கள் பாவம்'[3] (உ.வே.சாமிநாதையர், நினைவு மஞ்சரி, முதல் பாகம், பக்க எண்.184) என்ற தலைப்பில் ஒரு கட்டுரை அமைந்துள்ளது. 'சிவராசதானி'[4] (உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், பக்க எண்.218) என்று போற்றப்படுவதும் சைவ மடங்களுள் புகழ்பெற்று விளங்கியதுமான திருவாவடுதுறை ஆதீனத்தில் கடைபிடிக்கப் பட்ட உணவுமுறை பற்றிய செய்தி அக்கட்டுரையில் அமைந்துள்ளது. உ.வே.சா. வாழ்ந்த காலத்திற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சிற்றம்பல தேசிகர் என்பவர் ஆதீனகர்த்தராக (ஆதீனத்தலைவர்) இருந்தார். அவருக்குக் கீழ் துறவு பூண்ட பல சிவனடியார்கள் இருப்பர். அவர்கள் தம்பிரான்கள் என்று அழைக்கப்பட்டனர். அதிக அனுபவம் உடைய தம்பிரான்களே நிர்வாகத்தையும் கவனித்து வந்தனர். தம்பிரான்களுள் தலைமை அதிகாரத்தை உடைய தம்பிரானுக்கு 'பெரிய 'காறுபாறு' என்று பெயர் வழங்கியது. அடுத்தடுத்த நிலையில் இருப்பவர்களுக்குச் 'சின்னக் காறுபாறு' என்பது பெயராகும். புதிதாக வந்து சேரும் துறவிகளை 'குட்டித் தம்பிரான்கள்' அல்லது 'குட்டி' என்று அழைப்பது அம்மடத்தின் வழக்கமாக இருந்தது. தம்பிரான்கள் தம் நிலையில் இருந்து அவரவர்களுடைய பொறுமை, ஒழுக்கச்சீலம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு படிப்படியாக உயர்வு பெறுவர். தம்பிரான்கள் கூட்டத்திற்குத் 'திருக்கூட்டம்' என்று பெயர்.

உணவு நேரத்தில் காறுபாறு நிலையில் இருக்கும் தம்பிரான்களுக்கு சிறந்த அன்னமும் பல்வேறு வகையான உணவுப் பதார்த்தங்களும் இலையில் பரிமாறப்படும். அடுத்தடுத்த நிலையில் இருக்கும் தம்பிரான்களுக்கு இலையின் நீளம் குறைந்து கொண்டே வரும். கடைசியில் வந்து சேர்ந்த குட்டித் தம்பிரான்களுக்கு சிறிய இலையில் சிறிதளவு உணவுகளே பரிமாறப்படும். அதோடு தரமில்லாத அரிசியில் செய்யப்பட்ட அன்னமே வழங்கப்படும்.

விக்கிரம சிங்கபுரம் என்ற ஊரில் பிறந்து பிற்காலத்தில் புகழ்மிக்கு விளங்கியவராக ஸ்ரீசிவஞான முனிவர் அப்பொழுது அம்மடத்தில் இளமைப் பிராயத்தினராகத் தங்கி இருந்தார். மடத்து வழக்கப்படி அவருக்கு கடைசி இலைதான் தரப்பட்டது. சிவஞான முனிவரும் அவர் வரிசையில் இருந்தவர்களும் தமக்கு அளிக்கப்பட்ட உணவு உண்ண முடியாதபடி இருந்ததால் உணவை உண்ணாமல் விழித்தபடி அமர்ந்திருந்தனர். அன்று அவர்களுக்கு அளிக்கப்பட்ட அன்னம் சுவையின்றி புளியம்பூ நிறத்தில்

இருந்தது. உணவு சரியாக சமைக்கப்படவும் இல்லை. ‘இதை யாரப்பா பொங்கினான்?’ என்று ஒருவர் கேட்க, ‘யாரோ ஒரு கொங்கர்’ என்று மற்றொருவர் பதிலளித்தார். தமிழறிவு உடைய அவர்களில் ஒருவர் தமக்குக் கிடைத்த உணவைப் பற்றி செய்யுள் பாடத் தொடங்கிவிட்டார். முதலடியை ஒருவரும் இரண்டாம் அடியை மற்றொருவரும் மூன்றாம் அடியை வேறொருவருமாகப் பாடினர். நான்காம் அடியை அடுத்ததாக அமர்ந்திருந்த சிவஞான முனிவர் பாடினார்.

“கொங்கன்வந்து பொங்கினான் கொழியரிசிச் சோற்றினைச்

சங்கமங்கள் கூடியே சாப்பிடத் தொடங்கின

அங்குமிங்கும் பார்க்கிறீர் அமுதினிற் கண்ணில்லையே

எங்கள்பாவ மெங்கள்பாவ மெங்கள்பாவ மீசனே”[5] (உ.வே.சாமி நாதையர், நினைவு மஞ்சரி, முதல் பாகம், பக்க எண்.187)

இப்பாடலில் அக்காலத்தில் சைவ மடங்களின் இருந்த உணவுமுறை வெளிப்படுகிறது.

“ஆசிரியரிடத்தில் வந்தடைந்த சிஷ்யன் சுவை முதலியவற்றிலே கருத்தை ஊன்றாமல் எது கிடைத்தாலும் அருந்த வேண்டும் என்பது நூற்கருத்தாதலின் அத்தகைய ஏற்பாடு அமைந்தது போலும்”[6] (உ.வே. சாமிநாதையர், நினைவு மஞ்சரி, பக்க எண்.185) என்று அதற்கான காரணத்தையும் உ.வே.சா. கூறுகிறார். ஆகவே துறவுநிலை மேற்கொண்டவர்களுக்கு வழங்கப்படும் உணவானது உடல் பலத்தை மட்டுமே வழங்காமல் மனவலிமையையும் இறை பக்தியையும் வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு மடங்களில் இளந்துறவிகளின் பயிற்சி காலங்களில் இத்தகைய உணவு வழங்கப்பட்டு வந்ததை அறிய முடிகிறது.

“உணவு என்பது ஒரு குறியீடு. அந்த ஒரு கணத்தில் தன் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாதவர்கள் மற்ற நேரங்களில் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதற்கு சாட்சியாக அமைந்துவிடுகிறது“[7] (இறையன்பு, உள்ளொளிப் பயணம், பக்க எண். 101) என்ற முனைவர் இறையன்பு அவர்களின் கருத்தும் இதற்கு வலிமை சேர்ப்பதாக உள்ளது.

## மாங்குடியாரின் உணவு முறை

மகாராஷ்டிரா மன்னர்கள் தஞ்சையை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் அரண்மனையில் நவராத்திரி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. வடநாட்டிலிருந்தும் தென்னாட்டிலிருந்தும் பல்வேறு கலைஞர்களும் வித்வான்களும் வந்து தங்கள் திறமைகளைக் காட்டி அரசரையும் மற்றவர்களையும் மகிழ்வித்துப் பரிசுகளைப் பெற்றுச் செல்வர். ஓர் ஆண்டு நவராத்திரி விழாவிற்கு வடநாட்டில் இருந்து மல்யுத்த வீரர் ஒருவர் தன் பரிவாரங்களுடன் வந்திருந்தார். அவர் ஏற்கனவே பல சமஸ்தான வீரர்களோடு மோதி வெற்றிப்பெற்றவர். அவர் தஞ்சைக்கு வந்திருப்பது தெரிந்து சுற்றி இருந்த பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மல்யுத்த விளையாட்டை வேடிக்கை பார்க்க வந்திருந்தனர். அரசர் தன் அரண்மனையின் மாடத்தில் இருந்து விளையாட்டைப் பார்வையிட்டு வந்தார். போட்டி தொடர்ந்து சில நாட்கள் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் பலர் வடநாட்டு வீரரிடம் மற்போர் புரிந்து தோல்வி அடைந்து வந்தனர். வடநாட்டு வீரர் தொடர்ந்து வெற்றிப் பெற்று வந்ததால் பெருமிதமும் உற்சாகமும் அடைந்தார். ஆனால் அரசர் மனமோ தன்னுடைய சமஸ்தானத்தில் இவரை தோற்கடிக்கும் ஆற்றல் பெற்ற வீரர் யாருமில்லையே என்று கவலையானது.

அப்பொழுது கீழே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தின் நடுவே ஒரு பெரிய மூட்டை தனியாக நிற்பதை அரசர் பார்த்தார். மூட்டை எப்படி தனியாக நிற்கிறது, அங்கே தூண் எதுவும் இல்லையே என்று எண்ணிய அரசர் வீரர்களிடம் அதனை விசாரித்து வரச் சொன்னார். மல்யுத்தத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்துக்கு நடுவே ஒரு பிராமணர் நிற்பதாகவும் அவர் தன் தலையில் மூட்டையைச் சுமந்து கொண்டு நிற்பதாகவும் அரசருக்குத் தெரியவந்தது. அதோடு மூட்டை அவருக்குப்` பெரிய பாரமாக தெரியாததால் அவர் அதனை தலையில் சுமந்து கொண்டே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகவும் விசாரித்துத் தெரிந்து கொண்டார். பெரிய நெல் மூட்டை

பாரமாகத் தெரியாவிட்டால் அவர் எவ்வளவு பலசாலியாக இருப்பார் என அரசர் சிந்தித்தார். அவரை அழைத்து வரச் செய்தார். விசாரித்ததில் அவர் மாங்குடி என்ற ஊரைச் சேர்ந்த கைலாசையர் என்பதும் மல் விளையாட்டில் பயிற்சி பெற்றவர் என்றும் அறிந்து கொண்டார். உம்மால் இந்த வடநாட்டு வீரரை வெல்ல முடியுமா? என அரசர் கேட்டார். நிச்சயமாக முடியும் என்று மாங்குடியார் தெரிவித்தார். அவர் பல சமஸ்தானங்களுக்குச் சென்று பலரை வென்றவர் ஆயிற்றே என அரசர் கேட்டதற்கு, ஏதோ சில இடங்களில் வலிமையற்றவர்கள் அவரிடம் தோற்று இருக்கலாம். ஆனால் எங்கள் ஊரில் உள்ள ஒரு சிறுவன் கூட இவரை எளிதில் வென்று விடுவான் என்று விடையளித்தார் கைலாசையர். 'வடநாட்டு வீரர் மாமிச உணவுகளைச் சாப்பிடுபவர்; உடல் வலிமை மிக்கவர்; உங்களிடம் என்ன பலம் இருக்கிறது?' என்று அரசர் கேட்டதற்கு, 'நாங்கள் எல்லாம் ஈசுவர ஆராதனம் செய்பவர்கள். ஈசுவரனுக்கு நிவேதனம் செய்த அன்னத்தையே சாப்பிடுபவர்கள். எங்கள் உடம்புக்கு அந்த பிரசாதம் பலத்தை உண்டாக்குகிறது' என்று தெரிவித்தார். இதைக் கேட்டவுடன் மிகுந்த பலசாலியும் சிவபக்தருமான அரசர் கண்களில் நீர் துளிர்த்தது. வடநாட்டு வீரருடன் கைலாசயருக்குப் போட்டி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

தன்னை எதிர்த்து மல் விளையாட்டுக்கான ஆயுதமோ, உடுப்போ அணியாத ஒரு பிராமணர் வருவதைக் கண்டு வடநாட்டு வீரர் அசட்டையாக இருந்தார். கைலாசையர் வந்து நின்றவுடன் தன் வலக்கையால் அவர் இடப்பக்கத்தில் குத்த எண்ணி கையை நீட்டினார். ஆனால் அதற்கு முன்பே அக்கையை தன்னிடக்கையால் கைலாசையர் பிடித்துக் கொண்டார். ஆகவே தன் இடக்கையால் வடநாட்டு வீரர் அவரைத் தாக்க முயன்றார். ஆனால் அக்கையை தன் வலது கக்கத்தில் இடுக்கி வைத்துக் கொண்டார். கைகளை வடநாட்டு வீரரால் இழுக்க முடியவில்லை. கைலாசையர் தன் பிடியை மேலும் மேலும் இறுக்கிக் கொண்டே வந்தார். தன்னால் அவரோடு விளையாடி வெல்ல இயலாது என்பதை வடநாட்டு வீரர் உணர்ந்து கொண்டார். விளையாட்டு ஆரம்பமாகும் முன்பே தன் தோல்வியை ஒப்புக்கொண்டார். அரசர் மகிழ்ச்சி அடைந்து இருவருக்கும் பல பரிசுகளை வழங்கி வடநாட்டு வீரருக்கு ஆறுதலும் கூறினார். சில தினங்கள் அரண்மனையில் தங்கி இருந்தபின் கைலாசையர் ஊர் திரும்ப எண்ணி அரசரிடம் விடை பெற்றுக் கொண்டார். அப்போது வடநாட்டு மல்லர் கைலாசையர் ஊரையும் உறவினர்களையும் பார்க்க விரும்புவதாக தெரிவித்தார். அரசர் அனுமதியளித்தார். தன் பரிவாரங்களுடன் கைலாசையரைத் தொடர்ந்து மாங்குடிக்குச் சென்றார் வட நாட்டு வீரர். மாங்குடி சென்றடைந்த பின் அனைவருக்கும் காலை உணவாகப் பழைய சாதம், ஊறுகாய் முதலியவை பரிமாறப்பட்டன. கூடவே ஒரு கைப்பிடி ஊறவைத்த எள்ளும் அனைத்து இலைகளிலும் வைக்கப்பட்டது. வடநாட்டு வீரருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் அந்த எள்ளை என்ன செய்வது என்று தெரியவில்லை 'இதை என்ன செய்வது ?' என்று கேட்டனர். 'அதை எடுத்துச் சாதத்தில் பிழிந்து கொண்டால் எண்ணெய் வரும். அதுதான் உடலுக்கு பலம்' என்று கைலாசையர் கூறினார் . வந்திருந்த விருந்தினர்கள் எள்ளை எடுத்துப் பிழிந்தார்கள். ஆனால் அதிலிருந்து எண்ணெய் வரவில்லை. ஆகவே கைலாசையர் எள்ளைப் பிழிந்து வைக்குமாறு அங்கிருந்த ஒரு சிறுவனுக்கு உத்தரவிட்டார். அவன் சரசரவென வரிசையாக எல்லோரும் இலையில் இருந்த எள்ளையும் பிழிந்து எண்ணெய்யை சாதத்தில் பிழிந்து சக்கையை போட்டுவிட்டான். இக்காட்சியை கண்ட விருந்தினர்கள் 'இங்கே எல்லோரும் இரும்பைப் போன்ற உடம்பு கொண்டவர்களாக 'இருப்பார்களோ'[8] (உ.வே.சாமிநாதையர், நினைவு மஞ்சரி, பக்க எண்.125) எனத் தம்முள் எண்ணினர்.

இந்நிகழ்ச்சியின் மூலம் பழந்தமிழர் எளிமையான உணவையே உண்டு வந்தனாராயினும் உடல் உறுதியுடன் வாழ்ந்தனர் என்பதை அறியலாம். மேலும் கடவுளுக்குப் படைக்கப்பட்ட உணவு மேன்மையானது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தமையால் அவ்வுணவு அவர்களுக்கு மனவலிமையைக் கொடுத்தது. அதோடு கையால் எள்ளைப் பிழிந்து எண்ணெய் எடுக்கும் அளவு அவர்கள் உடல் வலிமை உடையவர்களாக இருந்தனர் என அறிகிறோம்.

## ஆறுமுகமங்கல நிகழ்ச்சி

உ.வே.சா. சிலப்பதிகார ஏட்டுச்சுவடிகளைத் தேடுவதற்காகத் தமிழகத்தின் தென்பகுதி நோக்கி ஒரு கோடைக்காலத்தில் பயணித்தார். அப்பொழுது திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர்களைக் கடந்து ஆறுமுகமங்கலம் என்ற ஊரை அடைந்தார். அவ்வூரிலுள்ள ஒரு வீட்டில் பகல் உணவு உண்டார். அந்த வீட்டுக்காரர் உ.வே.சா.வுக்காக பெரிய விருந்து உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார். ஆண்டான் கவிராயர் என்ற புலவர் ஆறுமுகமங்கலம் வந்தபோது என்ன காரணத்தினாலோ அவருக்கு பசிக்கு ஏற்ற உணவு கிடைக்கவில்லை. காளமேகப் புலவரைப் போலவே வசைபாடுவதில் வல்லவரான அப்புலவர்,

"ஆறுமுக மங்கலத்துக்கு யார் போனாலும்

சோறு கொண்டு போங்கள் சொன்னேன் சொன்னேன்"[9]( உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக்க எண்.682)

என்று சொல்லி மேலும் சில வரிகளும் பாடினார். இதனை உ.வே.சா. தன்னுடன் உணவு உண்டவரிடம் குறிப்பிட்டு ஆண்டான் கவிராயர் இந்த ஊரைப் பற்றி இவ்வளவு இழிவாகச் சொல்லி இருக்கிறார். ஆனால் எங்கும் சாப்பிடாத புதிய உணவுகள் கூட இங்கே கிடைக்கின்றனவே என்று கேட்டபொழுது அந்த அவப்பெயரைப் போக்குவதற்காகவே இவ்வூருக்கு யார் வந்தாலும் இவ்வூரார் சிறப்பாக விருந்து அளித்து அனுப்புவது வழக்கம் என்று விடை கூறினார். வசை பாடுவதில் வல்லவராக விளங்கிய ஆண்டான் கவிராயர் எழுதிய பாடல்களையும் அவரின் வரலாற்றையும் தமிழில் வசைப்பாடல்கள்[10] (ஆ. தசரதன், தமிழில் வசைப் பாடல்கள், பக்க எண்.55) என்ற நூலாலும் அறிய முடிகிறது.

## முடிவுரை

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"[11] (ப.இராமநாதப் பிள்ளை (உரையாசிரியர்), திருமந்திரம் மூவாயிரம், பக்க எண்.705) என்னும் திருமூலரின் வாக்குப்படி வாழ்ந்தவர்கள் தமிழர்கள். உணவை உடல் வலிமைக்காக மட்டும் உண்ணவில்லை. ஒவ்வொரு வேளை உணவையும் கடவுள் அளித்த வரமாகவே அவர்கள் கருதினர் என்பதையும், அதோடு மனத்தையும் உடலையும் பண்படுத்தக் கூடிய வகையில் நம்முன்னோர்களின் உணவுமுறை அமைக்கப்பட்டிருந்தது என்பதையும், மேலும் விருந்தோம்பல் பண்பு அவர் வாழ்வில் இரண்டறக் கலந்து இருந்தது என்பதையும், தம் ஊரில் ஒருவருக்கு உணவு கிடைக்கவில்லை என்று கூறுவது தனக்கு ஏற்பட்ட தலைகுனிவு என்று அக்கால மக்கள் கருதினர் என்பதையும் உவேசாவின் உரைநடைப் படைப்புகள் வாயிலாக நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

## References

ப. இராமநாதப் பிள்ளை (உரையாசிரியர்), திருமந்திரம் மூவாயிரம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டி.டி.கே.சாலை, ஆள்வார் பேட்டை, சென்னை-18, டிசம்பர் 1996.

முத்து சண்முகன், இக்கால மொழியியல், முல்லை நிலையம், 9. பாரதி நகர் முதல் தெரு, தி.நகர், சென்னை-17 டிசம்பர் 1998

உ.வே.சாமிநாதையர், நினைவு மஞ்சரி, முதல் பாகம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 90 2014

உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், பக்க எண்.218, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 90 2014

உ.வே.சாமிநாதையர், நினைவு மஞ்சரி, முதல் பாகம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 90 2014

உ.வே.சாமிநாதையர், நினைவு மஞ்சரி, முதல் பாகம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 90 2014

இறையன்பு, உள்ளொளிப் பயணம், தாகம் பதிப்பகம், பாண்டி பஜார், டி.நகர், சென்னை-17 டிசம்பர் 2002

உ.வே.சாமிநாதையர், நினைவு மஞ்சரி, முதல் பாகம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 90 2014

உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 90 2014

ஆ. தசரதன், தமிழில் வசைப் பாடல்கள், தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், கொட்டிவாக்கம், சென்னை-41, டிசம்பர் 1994

இராமநாதப் பிள்ளை (உரையாசிரியர்), திருமந்திரம் மூவாயிரம், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,154 டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை, சென்னை -18, டிசம்பர் 1996.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License